வருகின்றது, செங்களவர்புரி என்ற பகுதியிலே இருக்கக்கூடிய ஒரேயொரு துணைச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே இந்தத் தொகுதிக்கு ஒரு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக, மருத்துவமனையாக அமைக்கக்கூடிய அடிப்படையிலே, இந்த நிதியாண்டிலே செங்களவர்புரி துணைச் சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கிட்டத்தட்ட 117 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. வருகின்ற நிதியாண்டிலே நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. பெ. வாசுதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

74—

அவசர ஊர்தி

***42201—திரு. பெ. வாசுதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு அவசர ஊர்தி (Ambulance) தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட செய்யூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது நல்ல நிலையிலே ஓர் ஆம்புலன்ஸ் வாகனம் இயங்கி வருகிறது. எனவே இம்மருத்துவமனைக்கு மற்றுமோர் அவசர ஊர்தி வழங்கும் அவசியம் எழவில்லை.

2004 ஜூலை 29]

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வாசுதேவன். (குறுக்கீடு) இல்லையா? வினா எண் 75, திரு. பால் மனோஜ் பாண்டியன் (குறுக்கீடு) திரு. வாசுதேவன்.

திரு. பெ. வாசுதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதைப் பார்த்து தமிழக மக்கள் அனைவரும் அம்மா அவர்களைப் பாராட்டுகின்றார்கள். எனது மதுராந்தகம் தொகுதியில் செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி தற்சமயம் இல்லை; அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இருக்கின்றது என்று. அந்த ஆம்புலன்ஸ் செய்யூர் அரசு மருத்துவமனையில் இல்லை; தற்சமயம் இல்லை. அமைச்சர் அவர்கள் அதைச் சரிவர ஆய்வு செய்து, எங்கள் செய்யூர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி பெற்றுத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வாசுதேவன், இடத்தை மாற்றி உட்கார்ந்திருக்கிறீர்களா? சரி, சரி.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு சில குறிப்புகளைக் கொடுக்கிறேன். ஆம்புலன்ஸ் வாகனம் நல்ல நிலையிலே இயங்கி வருகிறது. ஊர்தி பதிவு எண் T.N.21G.1525 என்ற நம்பர் கொண்ட அந்த வாகனம் அங்கே இயங்கி வருகிறது. மேலும் தங்களுடைய கோரிக்கையை ஏற்று இதுசம்பந்தமாக ஆய்வு செய்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த ஆம்புலன்ஸ்களுக்கும், அதுபோக மருத்துவத் துறையின் சார்பாக இயங்கக்கூடிய அத்தனை ஊர்திகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அங்கே டிரைவர்களை நியமிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுபோன்று ஆம்புலன்ஸ்கள் எந்த எந்த மாவட்டங்களில் எந்த எந்த மருத்துவமனைகளில் இயங்காமல் இருக்கின்றனவோ அவற்றையும் இயங்க வைக்க .கடந்த ஒரு மாத காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பல்வேறு கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஆம்புலன்ஸ்கள் எல்லாம் செம்மையான முறையிலே இயங்கி வருகின்றன.

திரு. பெ. வாசுதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செய்யூர் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் இல்லை; அங்கே டிரைவர் இல்லை என்று சொன்னார்கள். ஆம்புலன்சும் இல்லை. அங்கே காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலே ஆம்புலன்ஸ் இருப்பதாக அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆம்புலன்ஸ் வழங்கினால் எங்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற மக்களுக்கு இலகுவாக இருக்கும் — ஆகவே அந்த ஆம்புலன்ஸைப் பெற்றுத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாகக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

75—

அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம்

***16545—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.